பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 17 சனிக்கிழமை 30.03.2024 கதிர் 144

## சீன அபிவிருத்தியே உலக பொருளாதாரத்தின் விருத்தி

### பீஜிங் சென்றுள்ள பிரதமர் தெரிவிப்பு

சீனாவின் பொருளாதார அபிவிருத்தியே உலகப் பொருளாதாரத்தின் அபிவிருத்தி என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

சீனாவுக்குச் சென்றுள்ள அவர் தலைநகர் பீஜிங்கில் நேற்று நடைபெற்ற போஆ மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

சீனாவின் பொருளாதார அபிவிருத்தியே உலகப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியாகும். உலகில் பொருளாதார அபிவிருத்தி இடம்பெறுகின்ற விதம் சம்பந்தமாக நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

புதிய முன்னேற்றங்கள் உருவாகியுள்ளன. அதனைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் யதார்த்தமாகச் செயற்படவேண்டும். மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் ☞ 2

## வி.கழகங்களில் அரசியல்வாதிகளுக்கு உயர் பதவி வழங்காமலிருப்பது நல்லது

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து

விளையாட்டுக் கழகங்களில் அரசியல்வாதிகளுக்கு உயர் பதவிகள் வழங்காமல் இருப்பது அனைவருக்கும் நல்லதாகும் என நம்புகிறேன். அதேபோல் அரசியலையும் விளையாட்டையும் தனித்தனியாக வைத்திருப்பது உசிதமானதாகும் என்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு ஷங்ரீலா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற சிங்கள விளையாட்டுக் கழகத்தின் 125 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவிலேயே அவர் மேற்கண்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'றோயல், சென். தோமஸ், வெஸ்லி உள்ளிட்ட பாடசாலைகளில் இருந்து கிரிக்கெட்டில் இணைந்தவர்கள் அனைவரும் இங்கு வந்து சிங்கள விளையாட்டுக் கழகத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேபோன்று எனது பாட்டனாரான மீதெனிய அதிகாரம், எனது தாத்தா சி.எல். விக்கிரமிசிங்க உட்பட அக் காலத்தைச் சேர்ந்த பலரும், இலங்கையர் என்ற அடையாளத்தை நிலைநாட்ட விரும்பியதாலேயே சிங்கள விளையாட்டுக் கழகத்தில் இணைந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் எனது தந்தையாரும் இணைந்துக்கொண்டார்.

அன்று இவ்வாறான விளையாட்டுக்கழகங்களை உருவாக்கினோம். தமிழ சமூகமும் விளையாட்டுக் கழகங்களை உருவாக்கின. அவை இன மோதலுக்காக அன்றி, பல்வேறு கழகங்கள் வாயிலாக தங்களது அடையாளத்தை உறுதிப் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

பிரதமர் தினேஸ் குணவர்த்தன சீர்னவுக்குச் சென்றிருக்கிறார். அதற்கொரு முக்கியமான காரணம் இருக்கின்றது. சீனாவினால் 2022 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு வழங்கப்பட்டுவந்த கடன் தவணைக் கொடுப்பனவு நிவாரணம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து சீன அரசு ஏற்கனவே இலங்கைக்கு அறிவித்துள்ளதாகவும், கடனை செலுத்துவதை மீளச் செலுத்தத் தொடங்குமாறு சீனா தெரிவித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கை சீனாவிடம் 26.4 பில்லியன் டொலர்கள் கடன்பட்டுள்ளது. நாடு வங்குரோத்து அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி முதல் இரண்டு வருட கால அவகாசத்தை சீனா வழங்கியிருந்தது.

அந்தக் காலம் முடிய இன்னும் சில நாட்கள்தான். அதன்படி, அந்த கால அவகாசம் முடிவடைந்த பின்னர், மீண்டும் சீன கடனை இலங்கை செலுத்த ஆரம்பிக்க வேண்டும் ☞ 2

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கருணாவின் ஆதரவு ரணிலுக்கே

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவரை ஆதரிப்போம் என்று முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளின் நலன்களை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழும் மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த குடும்பத் தலைவிகளும், விடுதலைப் புலிகள் மாத்திரமல்லாது அனைத்து இயக்கங்களையும் சேர்ந்த போராளிகளும் வாழ்வாதாரமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்காக புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அம்மான் படையணி அமைப்பு போராளிகளின் நலம் பேணுவதற்காக உருவாக்கப்பட்டு, பெரும்பாலும் வட மாகாணத்திலேயே தற்போது செயற்பட்டு வருகின்றது. ☞ 2

# முதலில் பொதுத் தேர்தல் நடந்தால் பொருளாதார சீரமைப்பு பாதிப்புறும்

### அதனால் ஜனாதிபதித் தேர்தலே முதலில் என்கிறார் ருவன்

முதலில் பொதுத் தேர்தலை நடத்தினால் அதில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால், பொருளாதாரச் சீரமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டு நாடு மீண்டும் மிக மோசமான நிலையை அடையும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித்தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரி மஹாநாயக்க தேரர்களிடம் நேற்று ஆசிர்வாதம் பெற்றுக் கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் ☞ 2

## இந்தியாவுக்குப் பாலம் அமைக்கும் அடுத்த கட்டப் பணிகளுக்காகக் குழு

### நியமிக்க இரு தரப்பினரும் இணக்கம்

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான தரை வழித் தொடர்புக்கான பாலத்தினை நிர்மாணிப்பது தொடர்பான ஆய்வுப் பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் அடுத்த கட்டம் சம்பந்தமான விடயங்களை கையாள்வதற்குப் பிரதிநிதிகள் குழுவொன்றை நியமிக்குமாறு இந்தியா இலங்கையிடம் கோரியமைக்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா தலைமையிலான குழுவினருக்கும், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், பணிக்குழாம் பிரதானியுமான சாகலரத்நாயக்க தலைமையிலானகுழுவினருக்கும் இடையில் கடந்த இரண்டு நாட்களாகப் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுக்களில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரையில் அமைக்கப்படவுள்ள இந்தப்பாலமானது, ☞ 2

### பெண்களின் பாலியல் வயதெல்லை குறித்து

## மனித உரிமைகள் ஆணைக்குழு நீதி அமைச்சருக்குக் கடிதம்

பெண்களின் பாலியல் செயற்பாட்டு வயதெல்லையைக் குறைக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டு அண்மையில் கடும் சர்ச்சைக்கு உள்ளாகியிருந்த தண்டனைச் சட்டக் கோவையின் 363 மற்றும் 364 ஆம் பிரிவுகளைத் திருத்துவதற்கான சட்ட மசோதா தொடர்பில் தமது அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு நீதியமைச்சர் விஜயதாஸராஜபக்சவுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

தண்டனைச்சட்டக் கோவையின் 363 மற்றும் 364 ஆம் பிரிவுகளைத்திருத்துவதற்கான சட்ட மசோதா குறித்து பல்வேறுதரப்பினராலும் கடும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதை யடுத்து, அச்சட்ட ☞ 2

## அரிசி, வெங்காயத்துக்கான இறக்குமதி வரிகள் குறைப்பு

அரிசி மற்றும் இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கான வரி 10 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. குறித்த வரிச்சலுகை ஏப்ரல் 30ஆம் திகதிவரை மாத்திரமே அமுலில் இருக்கும் என வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் அரிசிக்கு 1 ரூபாவாக குறைக்கப்பட்ட விசேட வர்த்தக வரி ஏப்ரல் 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வர்த்தக பொருட்களுக்கான வரியாக 65 ரூபா அறவிடப்பட்டது.

இது 2024 ஜனவரி 21 அன்று அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெற்ற இறக்குமதியாளர்களுக்கே பொருந்தும்.

சுங்கக் குறியீடு ☞ 2

## நட்டத்தில் இயங்கிய அரச நிறுவனங்கள் இன்று லாபமீட்டுகின்றன – அமைச்சர் மனுஷ

### எல்லாம் ரணிலால்தான் சாத்தியமானதாம்

நடத்தில் இயங்கி வந்த 52 அரச நிறுவனங்களுக்கு மக்களின் வரிப் பணத்தில் இருந்து சம்பளம் வழங்கப்பட்டு வந்த நிலைமாறி இப்போது அவை இலாபமீட்டி வருகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால்தான் இது வெல்லாம் சாத்தியமாயிற்று என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வவுனியா காமினி வித்தியாலய மைதானத்தில் ஜயகாமு சிறீ லங்கா மக்கள் நடமாடும் சேவையின் எட்டாவது நிகழ்வினைத் தொடக்கி வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று பல தலைவர்கள் நாட்டை வழிநடத்தவும், தேசத்தைக் காப்பாற்றவும் முன்வருகிறார்கள். ஆனால் பொருளாதார நெருக்கடியின்போது யாரும் பொறுப்பேற்க முன்வரவில்லை. அந்தநேரத்தில் லீகுவான் யூ அல்லது மகாதீர் முகமது யாரும் இல்லை. அச்சமற்ற தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்பேற்றுக் கொண்டார். முன்னைய ஜனாதிபதியின் காலத்தில், ஜூலை 2022 நிலவரப்படி நாட்டின் இருப்பு 1,815 மில்லியன் டொலர்களாகும்.

இந்த ஆண்டு பெப்ரவரிக்குள் கையிருப்பு பணத்தை ☞ 2

## நாமலுக்கு காலம் இருக்கிறது தொலவத்த எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதி உள்ளிட்ட உயர் பதவிகளுக்குப் போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்சவுக்கு இன்னமும் காலம் உள்ளது என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜே.சி. தொலவத்த தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாமல் ராஜபக்ச கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டமையை நாம் எதிர்க்கவில்லை. அவர் இளம் அரசியல்வாதி. பொதுஜன பெரமுனவை மீட்டெடுத்து கட்டியெழுப்புவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்தப் பணியை அவர் மேற்கொள்ள வேண்டும்.

நாமல் ராஜபக்ச என்னைவிடவும் நான்கு வயது இளையவர். அவர் ஜனாதிபதி உள்ளிட்ட பதவி நிலைகளுக்கு போட்டியிடுவதற்கு ☞ 2

## இனி இது .....

என சீனா தெரிவித்துள்ளது.

தமக்கான சலுகைக் காலத்தை மீண்டும் நீடிக்குமாறு இலங்கை ஆட்சியாளர்கள் கோரியுள்ளனர், ஆனால் அவ்வாறு வழங்கினால் ஏனைய நாடுகளும் இதே போன்று கடன் சலுகைக் காலத்தை கோரும் என்பதால் காலநீடிப்பு சாத்தியமற்றது என்று சீனா தெரிவித்துள்ளது.

உலகின் ஏனைய நாடுகள் சீனாவுக்கு சுமார் 600 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனை செலுத்த வேண்டியுள்ளதாகவும், இலங்கைக்கு மட்டும் கடனை செலுத்த கால அவகாசம் வழங்கப்படுமாயின் ஏனைய நாடுகளும் இதே கோரிக்கையை முன்வைக்க வாய்ப்புள்ளதாகவும் சீனா சுட்டிக்காட்டியுள்ளது. அது ஒரு கடுமையான நெருக்கடியாக இருக்கும்.

அதனடிப்படையில் ஏப்ரல் மாதம் முதல் கடனை செலுத்த ஆரம்பிக்க சீனா மேலும் தெரிவித்துள்ளதாகவும், இதனால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள ஆளும் தரப்பு அதனைச் சமாளிப்பதற்காகவே பிரதமரைச் சீனாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. இருப்பினும் பிரதமரின் பயணம் இது விடயத்தில் சாதகமாக அமைந்ததா இல்லையா என்பது இன்னும் சில தினங்களில் தெரியவந்துவிடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் எதிர் வரும் செப்டெம்பர், ஒக்டோபர் காலப்பகுதிக்குள் நடத்தப் படவேண்டும். அதன்படி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். என்றாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுன உள்ளிட்ட மேலும் சில கட்சிகள் கோரி வருகின்றன.

நாட்டின் தற்போதைய நிலையில் பொதுத் தேர்தல் இடம்பெற்றால் எந்தவொரு கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைப்பதற்கு போதுமான பெரும்பான்மை கிடைக்கப்போவதில்லை. அவ்வாறான நிலை ஏற்பட்டால் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி முன்னெடுத்துவரும் அனைத்து வேலைத்திட்டங்களும் தடைப்படும்.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டும் பின்தள்ளப்படும். அதனால் முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு, ரணில் விக்ரமசிங்க நிச்சயமாக அதில் வெற்றிபெறுவார். அதன் பின்னர் பொதுத்தேர்தல் ஒன்றுக்குசென்றால் நிலையான ஆட்சி ஒன்றை நாட்டில் ஏற்படுத்தலாம்.

ரணில் விக்ரமசிங்க கடந்த காலங்களில் பிரதமராக இருந்தே குறுகிய அதிகாரங்களுடன் நாட்டின் அபிவிருத்திக்குப் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தார். ஆனால் தற்போது நாடு வங்குராதே;து அடைந்திருந்த சந்தர்ப்பத்தில் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பல வேலைத்திட்டங்களை அவருக்கு செய்ய முடியுமாகி இருந்தது. அதனாலே குறுகிய காலத்தில் நாட்டை வங்குராதே;து நிலையில் இருந்து மீட்டு, மக்கள் தங்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுத்தார் - என்றார்.

## அரிசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1006.30.29 இன் கீழ் ஏனைய அரிசி வகைகளில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு இந்தச் சலுகை கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீரி சம்பாவுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், அதற்கு இணையான அரிசியை இறக்குமதி செய்வதற்காகவே இந்தவரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் தொடர்பில் ஆலோசனை கலந்துரையாடல்களை முன்னெடுக்கவிருப்பதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அறிவித்துள்ளார்.

இச்சட்டமூலமானது 18 வயதை அடையாத பெண் ஒருவர் பாலியல் உறவில் ஈடுபடுவதற்குரிய சம்மதத்தை அளிப்பதற்கான தகைமை வயதெல்லையை 16 இலிருந்து 14 ஆகக் குறைப்பதற்கு முன்மொழிகின்றது. அதேபோன்று பாலியல்வன்புணர்வில் ஈடுபடும் நபர் 22 வயதுக்குக் குறைந்தவராக (நடைமுறை சட்டத்தின்படி 18 வயதுக்குக் குறைந்தவர்) இருப்பின் அவர் தண்டனையிலிருந்து விலக்கீடுபெறக்கூடிய வாய்ப்பையும் இத்திருத்தம் வழங்குகின்றது. அதன்படி இச்சட்டமூலம் தொடர்பில் தமது அவதானிப்புக்களையும், பரிந்துரைகளையும் உள்ளடக்கி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகள் பாலியல் உறவில் ஈடுபடுவதற்குரிய சம்மதத்தை அளிப்பதற்கான வயதெல்லையை அதிகரிப்பதன் மூலம் சிறுவர்களை பாலியல் அத்துமீறல்களிலிருந்து பாதுகாப்பதற்கு முற்படுவதை அவதானிக்கமுடிகின்றது. குறிப்பாக இந்தியாவில் 2012ஆம் ஆண்டு பாலியல் குற்றங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் மூலம் இந்திய தண்டனைச் சட்டக்கோவையின் 375ஆம் பிரிவின் கீழ் பாலியல் உறவுக்கு சம்மதம் அளிப்பதற்கான வயதெல்லை 16 இலிருந்து 18 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக பாலியல் உறவுக்கான வாய்ப்பு மற்றும் வன்புணர்வுக் குற்றத்துக்கான தண்டனை ஆகியவற்றை நிர்ணயிக்கும்போது சிறுவர்களின் நலனுக்கே ஆளும் தரப்பு முன்னுரிமை அளிக்கவேண்டுமென பொதுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய தண்டனைச் சட்டக்கோவையின் 364(2) ஆம் பிரிவின்கீழ் சுட்டிக்காட்டப்படும் குற்றவாளி தொடர்பான வயதெல்லையை '18 வயதுக்குக்கீழ்' என்று பேணவேண்டும் எனவும், '22 வயதுக்குக்கீழ்' என அதிகரிக்கக்கூடாது எனவும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

மேலும் குற்றவாளி மற்றும் பாதிக்கப்பட்ட நபருக்கு இடையில் திருமண உறவு இருப்பினும், அதனைக் கருத்திற்கொள்ளாது 'வன்புணர்வை' குற்றமாக் குவதற்குரிய வாய்ப்பை உருவாக்கும்படி நாம் ஆளும் தரப்பை ஊக்குவிக்கின்றோம் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## சீன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலநிலை மாற்றம் ஆகியவற்றின் யதார்த்தங்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அத்துடன், ஆசிய நாடுகளில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் சம்பந்தமாக நாம் தெளிவடையவேண்டும். இலக்கை அடைவதற்காக நாம் ஒன்றிணைந்து பணிக்கவேண்டும். இலங்கையின் துறைமுக அபிவிருத்தியை சீனாவின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் பரந்த அபிவிருத்திச் செயற்பாடாக எடுத்துக்கொள்ள முடியும்.

இலங்கையின் கொழும்புத் துறைமுகம் புதிய அபிவிருத்தி அடைந்த துறைமுகமாக மாறும் என்பதுடன் எமது நாட்டுக்குத் தேவையான அபிவிருத்தி நிதிக்கட்டமைப்புக்களை இதன் ஊடாக கட்டியெழுப்புவதற்கு முடியும் என்றார்.

## நட்டத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

4,491 மில்லியன் டொலர்களாக உயர்த்தியுள்ளோம். கடனை மீளச்செலுத்தாத எமது உத்தியே இந்த உயர்வுக்குக் காரணம் என்று சிலர் வாதிடுகின்றனர். எவ்வாறாயினும், சர்வதேச இறையாண்மைப் பத்திரங்கள் (ஐஎஸ்பி) தவிர மற்ற வெளிநாட்டுக் கடனைகளை நாங்கள் திருப்பிச் செலுத்தத் தொடங்கியுள்ளோம். தனியார் வாகனங்களைத் தவிர்த்து இறக்குமதியையும் திறந்துள்ளோம்.

மேலும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் வருட காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்மறையாக 12.4 ஆக இருந்தது. இருப்பினும், அதை நேர்மறையான மதிப்பாக மாற்ற முடிந்தது. கடந்த 2023 வருடத்தின் காலாண்டில் அதை நேர்மறை 4.2 ஆக உயர்த்த முடிந்தது.

2022ஆம் ஆண்டில், நாட்டிலுள்ள 52 அரசுக்குச் சொந்தமான பெரிய நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க இழப்பைச் சந்தித்தன. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பொதுமக்களின் வரிப்பணத்தை பயன்படுத்தி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கியது. இந்த நிறுவனங்கள் கூட்டாக 744,658 மில்லியன் ரூபா இழப்பை சந்தித்தன. இருப்பினும், ஏப்ரல் 2023க்குள், அந்த நிறுவனங்கள் லாபகரமாக மாறின. இன்று இந்த நிறுவனங்கள் 144,224 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளன. நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்ற போது ஒரு டொலர் 380 ரூபாவாக இருந்தது. 500, 600 அல்லது 700 டொலர் ரூபாவை எட்டக்கூடும் என்று கணிப்புகள் இருந்தன.

இன்று நாம் டொலரின் பெறுமதியை 290 ரூபாவிற்கு வெற்றிகரமாகக் கொண்டு வந்துள்ளோம். இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில், வெளிநாட்டு தொழிலாளர்கள் 964 மில்லியன் டொலர்கள் அனுப்பியுள்ளனர். இதன் விளைவாக, நாங்கள் பொறுப்பேற்றதிலிருந்து, நாட்டிற்கு 10 பில்லியன் டொலர் வெளிநாட்டுப் பணம் வந்துள்ளது. வெளிநாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து பணம் அனுப்பப்படுவதைத் தொடர்ந்து, நாட்டின் மிகப்பெரிய டொலர் முதலீட்டைப் பெற்றுத்தரும் துறையாக சுற்றுலா உள்ளது.

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மட்டும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 400000ஐத் தாண்டியுள்ளது. 2023ஆம் ஆண்டு இதே காலகட்டத்தில் சுற்றுலா வருவாய் 332 மில்லியன் டாலரில் இருந்து 688 மில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. இதன்போது, ஊழியர்களின் சம்பளம் தொடர்பில் அமைச்சரவை முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளது. அரச ஊழியர்கள் சம்பள உயர்வைப் பெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளையில், தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியமும் 12,500 ரூபாவிலிருந்து 17,500 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட 3,500 ரூபாவையும் உள்ளடக்கியது, இதன் விளைவாக புதிய குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் 21,000 ரூபாவாகும். கூடுதலாக, ஊழியர்களின் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் பயன்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களும் தமது சம்பள உயர்வுக்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளதையடுத்து ஜனாதிபதியின் தலையீட்டை விரைவுபடுத்தியுள்ளனர். தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் சம்பள அதிகரிப்பு முன்மொழிவுகள் தொடர்பில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், இந்தக் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது என்றார்.

## நாமலுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னமும் காலமுள்ளது.

தற்போது ரணில் விக்கிரமசிங்க நாட்டை மேம்படுத்தி வருகின்றார். அவருக்கான கடைசிச் சந்தர்ப்பமும் இதுதான். ஆகவே அவரிடமிருந்து நாட்டுக்கான நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு சந்தாப்பம் அளிக்கப்பட வேண்டும். இதனை பொதுஜனபெரமுன புரிந்துகொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றார்.

## அடுத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்திலும் அதன் செயற்பாடுகளை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இதேநேரம், கோட்டாபய ராஜபக்சவின் காலத்தில் நாடு பாதாளத்திற்குள் தள்ளப்பட்டுவிட்டது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டை மீட்டெடுத்து வருகின்றார். ஆகவே அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டிக்களத்தில் இறங்குவாராக இருந்தால் நாம் அவரை ஆதரிப்போம். அதேபோன்று நாடாளுமன்றத் தேர்தலில் இறுதி நேரத்தில் நாம் கூட்டிணைந்தா அல்லது தனித்தா போட்டியிடுவது என்பதைத் தீர்மானிப்போம் என்றார்.

## இந்தியாவுக்குப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

23 கிலோ மீற்றர் நீளத்தினைக் கொண்டிருக்கும். வீதி மற்றும் தொடருந்துப் பாதை என்பன நிர்மாணிக்கப்படும்.

## வி.கழகங்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும் முயற்சியாகும். அவை மதம் அல்லது குலத்தை மையப்படுத்தியவை அல்ல. மாறாக மொழி மற்றும் கலாச்சாரத்தை அடிப்படையாககொண்டவையாகும். மலாயர்களும் தங்களுக்காக கழகத்தை உருவாக்கியிருந்தனர். அவற்றில் சிங்களவர், தமிழர், மலாயர் என அனைவரும் ஒன்று சேர்ந்துகொண்டனர். பின்னாளில் அனைவரும் ஒன்றிணைந்து பொது அடையாளத்தைப் பெற்றுக்கொண்டோம்.

சிங்கள விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர்களாக எமது கட்சியின் தலைவர்களும் செயற்பட்டுள்ளனர். டி.எஸ். சேனாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவும் தலைமைப் பதவி வகித்துள்ளனர். இது எமக்கு கௌரவமாகும். பிற்காலத்தில் உங்கள் விளையாட்டுக் கழகத்தில் நானும் உறுப்பினராகச் சேர்ந்தேன். ஆனால் ஒரு அரசியல்வாதியாக நான் அதிலிருந்து விலகியிருக்க தீர்மானித்தேன். இன்றைய அரசியல் நிலவரம் டி.எஸ்.சேனநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் இருக்கவில்லை.

அதனால் நாம் விளையாட்டிலிருந்து விலகி இருக்கிறோம் என்று கூறவில்லை. உங்களின் தேவைகள் குறித்து நாம் கவனம் செலுத்துவோம். நமது தலைவர்களின் சம்பிரதாயங்களை பேண வேண்டியது கடமையாகும். எனவே சிங்கள விளையாட்டு கழகத்திற்கு சொந்தமான காணியை 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

அதேபோல், இலங்கை கிரிக்கெட்டை பாதுகாப்பதோடு, கிரிக்கெட்டில் இலங்கை மீண்டும் முன்னணி இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இந்த வருடம் கிரிக்கெட் வளர்ச்சிக்காக அரசாங்கம் ஒரு பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. அடுத்த வருடம் மேலும் அதிக தொகையை வழங்குவோம். அந்தப் பணம் உங்கள் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினரான சிதத் வெத்தமுனி தலைமையிலான அறக்கட்டளையால் பேணப்படும், அதனூடாக கிராமப்புறப் பாடசாலைகளில் கிரிக்கெட்டை மேம்படுத்தவும், கிரிக்கெட் போட்டிகளை நடத்தி கிராமிய அளவில் கிரிக்கெட்டை பலப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

1000 - -1500 பாடசாலைகளில் கிரிக்கெட்டை மேம்படுத்த வேண்டும். பின்னர் தேசிய அணிக்கு தேவையான கிரிக்கெட் வீரர்களைத் தெரிவு செய்வதற்கான குழாம் ஒன்றை உருவாக்க வேண்டும். கிரிக்கெட் விளையாட்டை பலப்படுத்த மேலும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இப்பணிகளில் கிரிக்கெட் சபை மற்றும் விளையாட்டுக் கழகங்கள் மீது பெரும் பொறுப்பு சார்ந்துள்ளது.

அதேநேரம் சிங்கள விளையாட்டுக் கழகம் இந்த நாட்டில் கிரிக்கெட்டுக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக நன்றி தெரிவிக்கிறேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இலங்கையை கிரிக்கெட்டில் உலகின் தலைசிறந்த நாடாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# எதிர்க்கட்சி தலைவர் வவுனியா வடக்கில் ஸ்மார்ட் வகுப்பறையைக் கையளித்தார்

எதிர்க்கட்சித்தலைவர்சஜித்பிரேமதாஸவால் வியாழக்கிழமை வவுனியா வடக்கு, ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று கையளிக்கப்பட்டது.

சுமார் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த ஸ்மார்ட் வகுப்பறை தொகுதி மாணவர்களிடம் எதிர்க்கட்சித் தலைவரால் கையளிக்கப்பட்டிருந்தது.





இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான உமாசந்திரா பிரகாஷ், வன்னி தேர்தல் தொகுதிக்கான அமைப்பாளர் ச.நிரோஷ், ரசிகா கமகே ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

(05 - 100)

## ஆசிரியர் சேவையில் உறுதிப்படுத்தியதை மீளப்பெற்றமை குறித்து மீளாய்வு செய்க

### மாகாண கல்வி அமைச்சு செயலரிடம் இம்ரான் கோரிக்கை



(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா மற்றும் மூதூர் வலய ஆசிரியர்கள் சிலருக்கு வழங்கிய பதவியில் உறுதிப்படுத்தல் கடிதங்களை கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் இரத்துச் செய்துள்ளது. இது குறித்து மீளாய்வு செய்யுமாறுதிருகோணமலைமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை செயலாளரை அவரது அமைச்சில் சந்தித்து இக்கோரிக்கையை அவர் விடுத்துள்ளார். அவர் வழங்கியுள்ள கோரிக்கைக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் சில ஆசிரியர் களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தல் கடிதங் கள் அத் திணைக்களத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதற் காக பின்வரும் காரணம் குறிப்பிடப் பட்டுள்ளது.

2016.10.14 ஆம் திகதிய 1885/38 ஆம் இலக்க புதிய ஆசிரியர் சேவைப் பிரமானக் குறிப்பின் 8 ஆவது பந்தியில் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையாக 3 ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை சான்றிதழைப் பூரணப்படுத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பூர்த்தி செய்யாத காரணத்தால் ஏற்கனவேவழங்கிய உறுதிப்படுத்தல் கடிதம் இரத்துச் செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கே கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களக் கடிதத்தில் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு வெளிவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள திகதி தவறானது. இத்திணைக்களம் குறிப்பிட்டுள்ள இலக்கத்தையுடைய ஆசிரியர் சேவை பிரமானக் குறிப்பின் 8 ஆவது பந்தி முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சை தொடர்பாகவே குறிப்பிடுகின்றது. அதுவும் இத்தடை தாண்டலுக்கு 96 மணித்தியாலயங்களைக் கொண்ட மொடியூல்கள் பூரணப் படுத்துவது தொடர்பாகவே இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர் கலாசாலை சான்றிழ் குறித்து இப்பந்தியில் குறிப்பிடப்படவில்லை.

ஆசிரியர் சேவைப் பிரமானக் குறிப்பில் குறிப்பிடப்படுள்ள முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் தேவைப்பாடுகளை பூரணப்படுத்திய ஆசிரியர்களே பதவியில் உறுதிப் படுத்தல் கடிதங்களை ஏற்கனவே பெற்றிருந்தனர். அதுவே பின்னர் பொருத்தமான காரணம் இன்றி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஆசிரியர் சேவைப் பிரமானக் குறிப்பின் புரிதலில் உள்ள குறைபாடு காரணமாகவே இந்த இரத்துச் செய்தல் கடிதங்கள் சில ஆசிரியர்களுக்குவழங்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. எனவே, இந்த விடயங்களை மீளாய்வு செய்து பதவியில்உறுதிப்படுத்தல்கடிதங்களை மீளவழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

(05)

## பாராட்டத்தக்க சிறுவர்களை எவ்வாறு உருவாக்குவது?

### விழிப்புணர்வு கருத்தரங்கு

(பாறுக் ஷிஹான்)

பாராட்டத்தக்க சிறுவர்களை எவ்வாறு உருவாக்குவது தொடர் பான விழிப்புணர்வு கருத்தரங்கு இஸ்லாமபாத் முஸ்லீம் மகா வித்தியா லயத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம். றிஷாத் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படிகருத்தரங்குநன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தி யோகத்தர் ஏ.கே.காமிலாவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்பெண்கள்அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.ஜெனிதா மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.சாஜித் இந்நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்த ஆசிரியை ஜனாபா மர்ஜுன் போன்றோரும் கலந்து கொண்டனர். (05)

## பெண்கள் உழவு இயந்திரம் செலுத்தி கிளிநொச்சியில் மகளிர் தின நிகழ்வு



பெண்களால் செலுத்தப்பட்ட உழவு இயந்திர பயணத்துடன்பெண்கள்தினநிகழ்வுவியாழக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சிமாவட்டச்செயலகமும், மாவட்டமகளீர் விவகார குழுக்களின் சம்மேளனமும் இணைந்து மகளீர் தின நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த நிகழ்வு வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் குமரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவுள்ள 8 பெண்கள் உழவு இயந்திரத்தைசெலுத்திநிகழ்வில்பெறுமதிசேர்த்தனர்.

குறித்த பெண்களிற்கு ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர்றூபவதிகேதீஸ்வரன்உள்ளிட்டவிருந்தினர்கள் கைலாகு கொடுத்து உட்சாகப்படுத்தினர்.

தொடர்ந்துகுறித்தபெண்கள்உழவுஇயந்திரத்தை





செலுத்தி விழா மண்டபம் வரைசென்றதைதொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில், ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், யாழ் பல்கலைக்கழகசட்டத்துறை தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் வரவேற் கப்பட்டதை தொடர்ந்து மங்கள விள கேற்றப்பட்டு அரங்க நிகழ் வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(05-113)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கவனத்துக்குரிய அரசியல் நகர்வு

**கொழும்பில் 'மார்ச் 12' என்ற பொது அமைப்பு நடத்திய மாநாடு கவனத்தை ஈர்த்திருக்கிறது. 9 வருடங்களிற்கு முன்னர் பொது அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் இணைந்து இந்த அமைப்பை உருவாக்கினார்கள் என்று கூறப்படுகின்றது. தேர்தல்கள்நெருங்கிவரும்நிலையில்இந்தஅமைப்பு 'தூய்மை அரசியல்' என்கிற எண்ணக்கருவை முன்வைக்கிறது. இது கள யதார்த்தத்தில் எவ்வளவு சாத்தியம் என்கிற கேள்வி இருந்தாலும் இந்த எண்ணக்கரு கவனிக்கப்படவேண்டியதாக இருக்கின்றது.**

**இந்த அமைப்பின் கொழும்பு மாநாட்டில் வலியுறுத்தப்பட்டிருக்கும் சில விடயங்களும் கவனிக்கப்படவேண்டியவையாக இருக்கின்றன. மாநாடுவலியுறுத்தியவற்றில், இலவசகல்வி இலவச சுகாதாரத்திற்கு தேசிய வருமானத்திலிருந்து மூன்று வீதத்தினை ஒதுக்கவேண்டும், தேசிய இனப்பிரச்சினைக்கு முழுமையயான நிரந்தரமான தீர்வை காணவேண்டும் குறிப்பாக 13வது திருத்தத்தையாவது உரிய முறையில் அமுல்படுத்தவேண்டும், மலைய மக்களின் காணி உரிமை வீட்டுரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்திஉத்தரவாதப்படுத்தவேண்டும், வடக்கு கிழக்கில் பாதுகாப்பு படையினர்ஆக்கிரமித்த பொதுமக்களின் காணிகளை நிலங்கை மீள அவர்களிடம் ஒப்படைக்கவேண்டும், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நஸ்டஈட்டை வழங்க வேண்டும் காணாமலாக்கப்பட்டவர்களிற்கு என்ன நடந்தது அவர்கள்எங்கிருக்கின்றார்கள்என்பதைநேர்மையாக எடுத்துரைக்கவேண்டும், சட்டவிரோதமான சட்டங்களை இல்லாது ஒழிக்கவேண்டும் இந்த நாடு ஜனநாய நாடு என்ற அடிப்படையில் ஆர்ப்பாட்டங்களை தெரிவிப்பதற்கும்தங்களின் எதிர்ப்பை தெரிவிப்பதற்கும் உரிமையுண்டு அந்த உரிமையை பேணி பாதுகாக்கவேண்டும், நிறைவேற்று அதிகார முறையை முற்றாக இல்லாது ஒழித்து அதற்கான சட்டநடவடிக்கைகளை எடுக்கவேண்டும், ஊழல் இலஞ்சம் போன்றவற்றை முற்றாக ஒழிக்கவேண்டும் . பொருளாதார ரீதியில் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள மக்களிற்கு நிவாரணங்களை வழங்கவேண்டும் என்பன குறிப்பிடத்தகுந்த கோரிக்கைகளாக இருக்கின்றன.**

**இந்த நிபந்தனைகளை எந்த அரசியல்வாதி ஏற்கத் தயாராக இருக்கின்றாரோ அவரையே மக்கள் வரும் தேர்தல்களில் தெரிவு செய்யவேண்டும் என்பது இந்த அமைப்பின் வலியுறுத்தலாக இருக்கின்றது. அதேநேரம்இந்தக்கோரிக்கைகளைஏற்பவர்களுக்கே தமது ஆதரவு கிடைக்கும் என்றும் அமைப்பு அறிவித்துள்ளது. அரசியல்வாதிகளின் போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாற முடியாது என்பதும் இந்த அமைப்பின் கரிசனையாக இருக்கிறது.**

**இந்த அமைப்பின் இணை இயக்குநர்களாக சிங்களவர்களும் இடம்பெற்றுள்ள நிலையில், சிங்களப் பேராசிரியர்களும் இதற்கு ஆதரவு வழங்கும் நிலையில் இந்த அமைப்பின் வளர்ச்சியும் கோரிக்கைகளும் அரசியல் முன்னெடுப்பும் வெளிப் பார்வைக்கு முன்னேற்றகரமானவையாகவும் வரவேற்புக்குரியனவாகவும்தெரிகின்றன. இதுபோன்ற அமைப்புக்களுடன் தமிழர்கள் தமது நெருக்கத்தை வளர்த்துக்கொள்வது தெற்கில் சிங்கள மக்களிடம் தமிழ் மக்களின் கோரிக்கைகளைக் கொண்டு சேர்ப்பதற்கு உதவிகரமாக அமையும்.**

# ஒற்றைப் பெற்றோரின் சவால்கள்

**என்.பத்ரி**

பெற்றோரின் கடமைகள் பொறுப்புமிக்கவை. கல்வி உட்பட அனைத்து அடிப்படைத்தேவைகளும் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய பெருத்த உழைப்பும், தியாகங்களும் அவர்கள் சார்பில் தேவை.



பெற்றோர் இருவரும் இருக்கும் குடும்பங்களில் தாய் வீட்டையும், தந்தை நிதிசார்ந்த பணிகளையும் பார்த்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. ஒற்றைப் பெற்றோர் உள்ள குடும்பத்தில் இந்த இரண்டு பொறுப்பையும் ஒருவரே ஏற்க வேண்டும். இது மிகவும் சவால்மிக்க பணியாகும்.

ஒற்றைப் பெற்றோர் என்பது ஒரு குழந்தை அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுடன் வசிக்கும் தாய் அல்லது தந்தையைக் குறிக்கிறது. விவாகரத்து, ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து செல்வது, பெற்றோரில் ஒருவரின் திடீர் இறப்பு ஆகியவை ஒற்றை பெற்றோர் கொண்ட குழந்தைகள் உருவாகுவதற்கான காரணங்களாக அமைகின்றன.

பெற்றோர் இருவருமே உயிரோடு இல்லாத நிலையில், பாதிக்கப்பட்ட குழந்தைகள், தங்களிடம் அக்கறைக் காட்டும் உறவினர்கள் வீட்டில் வளர்கிறார்கள். அம்மாதிரியான வாய்ப்பு அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைப்பதில்லை. மேலும், அவர்கள் அம்மாதிரியான இடங்களில் வளர்வது குறித்துப் பல்வேறு முரண்பட்ட கருத்துகள் சமூகத்தில் நிலவுகின்றன.

கணவனை இழந்த மனைவிக்கு முதலில் 'கைம்பெண்' என்ற பட்டம் கிடைக்கிறது. அதைத் தொடர்ந்து பொருளாதார பின்னடைவு, சமூக அங்கீகாரத்தில் சறுக்கல் போன்றவை அவரைப் புரட்டிப் போட்டு விடுகின்றன. மனிதாபிமானம் அருகிவிட்ட இந்நாளில் நெருங்கிய உறவினர்கள்கூட, இறந்தவரின் இறுதிச்சங்கு முடிந்த உடனே சென்று விடுவதுதான் எதார்த்தமாகி விட்டது. கைம்பெண் ஒருவர், தந்தை இல்லாத பிள்ளைகளை வளர்ப்பதில் ஏராளமான சவால்கள் உள்ளன.

தந்தை ஒன்றுமே செய்யாமல் இருந்தால்கூட, வீட்டில் ஒரு ஆண்மகன் இருக்கிறார் என்ற உணர்வே குழந்தைகளுக்குத் தேவையான தன்னம்பிக்கையையும், மனதில் பாதுகாப்பையும் தரும். பெண்கள் இயற்கையிலேயே மிகுந்த மனவலிமை படைத்தவர்கள். அதனால்தான், திருமணம் முடிந்தவுடன், புதிய குடும்பத்தில் ஒருவராய் தன்னை அவரால் ஐக்கியப்படுத்திக் கொள்ள முடிகிறது. வீட்டோடு மாப்பிள்ளை என்பது எக்காலத்திலும் ஒரு ஆண்மகனுக்கு சரிபட்டு வராது.

பெற்ற குழந்தைகளை தொடர்ந்து படிக்க வைப்பது, வேலைக்கு அனுப்புவது, மணம் செய்து கொடுப்பது, அப்பாவின் இழப்பின் ஏக்கம் அவர்கள் மனதில் வந்துவிடாமல் பார்த்துக் கொள்வது, குடும்ப செலவுக்கு பணம் ஈட்ட கிடைக்கும் பணியை பயன்படுத்திக் கொள்ளுதல், உறவினரின் பழிச்சொல்லுக்கு எந்த நிலையிலும் ஆளாகாமல் கண்ணியத்துடன் குடும்பத்தை நிர்வகிப்பது போன்ற எத்தனையோ சவால்களை ஒரு கைம்பெண் சமாளிக்க வேண்டியுள்ளது.



இதற்கு மனைவியின் இழப்புக்கு பின்னால் கணவன் நிலைகுலைந்து போகிறான். எனினும், சிறிது காலத்திற்கு பின், குழந்தைகளை பார்த்துக் கொள்ள ஒரு ஆள் வேண்டும் என்ற காரணத்தால் மறுமணம் செய்து கொள்கிறான். சமூகமும் இதை அங்கீகரிக்கிறது. முதல் மனைவி பெற்றெடுத்த குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு புதிய மனைவியை வந்து ஒட்டிக்கொள்கிறது. அதனால் ஆண் வர்க்கத்தின் வருத்தங்களும், வேதனைகளும் நாளடைவில் வந்த வழியே விரைவாக போய்விடுகின்றன.

மாற்றாந் தாயின் குழந்தை வளர்ப்பு பல குடும்பங்களில் சொல்லிக்கொள்ளும்படியாக இருப்பதில்லை. புதிய மனைவிக்கு ஒரு குழந்தை பிறக்கும்போது, இந்த நிலைமை மேலும் மோசமடைகிறது. ஆனால் பெரும்பாலான கைம்பெண்கள் இளம் வயதினராக இருந்தாலும், மறுமணம் செய்து கொள்வதில்லை. சமூகமும் உறவும் அதில் அக்கறையும் காட்டுவதில்லை. எல்லாவற்றையும்மீறி மறுமணம்செய்துகொள்ளும் மனவலிமைகொண்ட கைம்பெண்கள் மிகச்சிலரே.

ஒற்றைப்பெற்றோர், பணிக்கும் வாழ்க்கைக்கும் இடையே சமநிலையைப் பேணுதல் மிகவும் முக்கியம். முடிந்தவரை பணியையும் சொந்த வாழ்க்கையையும் தனித்தனியே பார்த்துக் கொள்ளவேண்டும். குழந்தைகளுக்குத் தேவையானது அவர்களின் பணம் மட்டுமல்ல நேரமும்தான். அவர்களுடன் மறக்க முடியாத நிகழ்வுகளை உருவாக்க வேண்டியது அவர்களின் முதல் கடமையாக இருக்க வேண்டும். கணவனை இழந்து தவிக்கும் பெண்களுக்கு அரசு வழங்கும் வேலைவாய்ப்பு, பிற உதவிகள் பற்றிய தெளிவான புரிதல் தேவை. அப்போதுதான் அரசின் உதவிகளைப் பெற்று சிறப்பாக வாழ்ந்து காட்டுவதில் அவர்கள் முனைப்பு காட்ட முடியும்.

அவர்களுக்கு உறவுகள் அன்பையும் ஆதரவையும் அளிக்க முன்வர வேண்டும். அவர்களும் 'தான்' என்ற எண்ணம் இல்லாமல் மற்றவர்களுடன் கலந்து பழகவேண்டும். அப்போதுதான் தேவைப்படும் உதவியை மற்றவர்களிடமிருந்து எளிதில் பெறமுடியும். தனிமை உணர்வினைத்தவிர்த்து, நேர்மறையாக வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியும்.

குழந்தைகளும், ஒற்றைப் பெற்றோர் தமக்காக எடுத்துக் கொள்ளும் ஒப்பற்ற தியாகங்களை மனதில் கொள்ளவேண்டும். படிப்பில் நன்கு கவனம் செலுத்த வேண்டும். ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும். சரியான நண்பர்களைத் தேர்ந்தெடுத்து பழக வேண்டும். சமூகஊடகங்களைப்பயன்படுத்துவதில் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். படிக்கும் இடத்திலும் சமூகத்திலும் நல்ல பெயர் எடுக்க வேண்டும். தாய் அல்லது தந்தையின் கடின உழைப்பை மனதில் கொண்டு, ஆடம்பர செலவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

ஒற்றைப் பெற்றோர் தமது குழந்தைகளுக்காக செய்யும் தியாகங்கள் எராளம். பெற்றோருக்கு முதுமையில் உடல் நலமும் மன நலமும் குன்றிப் போகும். அந்த நாளில் பெற்றோரைத் தாங்கும் விழுதுகளாக பிள்ளைகள் செயல்பட வேண்டும்.

# விசேட தேவையுடைய மாணவருக்கான கலை இலக்கிய நிகழ்வு திருமலையில்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் ஏற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கலை, இலக்கிய நிகழ்வுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் புதன்கிழமை கோப் நிறுவனத்தால் நடத்தப்படும் விசேட தேவையுடைய பாடசாலையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வு திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ.இராஜசேகர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வின் தொடக்கவுரையை நூலக உதவியாளர் அ .அச்சுதன் வழங்க, வரவேற்புரையை நூலகர் திருமதி மு.லெ.றிம்சானா வழங்கினார்.

செயலாளரின் தலைமையுரையும் கோப் நிறுவனத்தின் பணிப்பாளரின் சிறப்புரையும் இடம் பெற்றது.

நிகழ்வில் நன்றியுரையை நூலக உதவியாளர் பா. விபூஷிதன் வழங்கினார்.

நிகழ்வில் நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் எச். எம். திலினி சந்தமாலி, பிரதம நூலகர் ந. யோகேஸ்வரன், நூலக உதவியாளர் உ . ரஜனிக்காந்த், கோப் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கிருஸ்னி உட்பட பலர் கலந்துகொண்டனர். (05)







குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகல விதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கல்முனை உப பிரதேச செயலக விவகாரம் 5 நாட்களாகத் தொடர்கின்றது போராட்டம்





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் ஐந்தாவது நாளாக நேற்று (வெள்ளிக்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர்.

மேற்படி பிரதேச செயலகத்தின் முன்பு கடந்த திங்கட்கிழமை பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாகைகள் தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்றுகூடி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதன்தொடர்ச்சியாக 5 ஆவது நாளான நேற்றும் பல்வேறு சுலோகங்களைமுன்வைத்துபோராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். நேற்றைய 5 ஆம் நாள் போராட்டத்தில் சேனைக்குடியிருப்பு விதாதா தையல் பயிற்சி நிலைய மாணவிகள் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும், கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகச்செயற்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் ஊடகங்களிடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்த போதிலும், ஒரு சில அரசியல்வாதிகள் தொடக்கம் உயரதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதன் காரணமாக பொதுமக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனைவடக்குஉபபிரதேசசெயலகத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளைக் கணடித்தும் திட்டமிடப்பட்டுபிரதேசசெயலகஉரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாதெனவும் அரசாங்கம் இன்னும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தனது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.(05)



## மீடியா போரத்தின் இப்தார் திருகோணமலையில்







(எச்.எம். ஹலால்தீன்)

திருகோணமலை மீடியா போரத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ரமலான் இப்தார் நிகழ்வு மீடியா போரத்தின் கிண்ணியா பிரதான காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

திருமலை மீடியா போரத்தின் தலைவர் எச்.எம்.ஹலால்தீன் தலைமையின்கீழ்நடைபெற்றஇந்த நிகழ்வில் அதிதியாக கிண்ணியா பிரதேசசெயலாளர்எம்.எச்.எம்.கனி, பொதுஜனபெரமுனமுன்னணியின் மூதூர் தொகுதி இணைப்பாளர் எம். ஐ.சதாத், தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நகர சபை வேட்பாளர் எஸ்.எச். நளீம், எம் கடமை நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் இராசமாணிக்கம் ஜீவேந்திரன், திருகோணமலை மீடியா போரத்தின் செயலாளர் எஸ்.எம்.நளீஜ் மீடியாபோரத்தின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழ், சிங்கள முஸ்லிம்இனங்களைபிரதிபலிக்கும் பிரமுகர்கள் கலந்துகொண்டதோடு இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் என்ற தொனிப் பொருளின் கீழ் இப்தார் நிகழ்வு இடம்பெற்றது. (05)

## கிண்ணியா அலிகார் மகா வித்திக்கு எம்.எஸ். தௌபீக் நேரடியாக வருகை





ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்திற்கு புதன்கிழமை விஜயம் செய்தார்.

இதன்போது பாடசாலையின் அதிபர் பாடசாலையில் செயற்படுத்தப்படவேண்டிய அபிவிருத்தி தொடர்பான விடயங்களை நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரியப்படுத்தினார்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# கத்தாரில் இலங்கைப் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

கத்தாரில்இயங்கிவரும்இலங்கைபாடசாலையான அல்அஷ்பால்சர்வதேசபாடசாலையின்அதிபரான மொஹமட் ரிஷாவின் தலைமையில் இந்த இப்தார் நிகழ்வு வியாழக்கிழமை பாடசாலை வளாகத்தில் மிக சிறப்பாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், கத்தாரின் தொழிலதிபரில் ஒருவரான பர்ஹான் அல் ஷேக் அல் சயீத், கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரியான ரஷீத் எம். பியாஸ், இலங்கை முஸ்லிம் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரான ரினோஸ் ஸாலிஹீன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மேலும்இந்தஇப்தார்நிகழ்வில்அப்பாடசாலையின் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்துக் கொண்டனர்.(05)







# கசிப்பு உற்பத்தி நிலையம் புதுக்குடியிருப்பில் முற்றுகை

## ஒருவர் கைது

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார்கட்டு குளப்பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன், சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இளைஞன் ஒருவரை நேற்று வியாழக்கிழமைகைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்ற கைது சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

புதுக்குடியிருப்பு உடையார்கட்டு குளத்தின் அருகிலுள்ள காட்டு பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்புபொலிஸ்கொஸ்தாபிள் பிரதீபனுக்குகிடைக்கப்பெற்றஇரகசிய தகவலையடுத்துதிடீர்சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் சார்ஜன் குணவர்த்தன மற்றும்பொலிஸ்கொஸ்தாபல்களான ஜெயசூரிய, பணாவர, பிரதீபன் ஆகிய குறித்த பொலிஸ் குழுவினர் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

கசிப்பு 56,000 மில்லி லீற்றர், 3 பரல்களுக்குள் 75,000 மில்லி மீற்றர் எரிந்த கோடாவும், கசிப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் உபகரணங்களுடனும்உடையார்கட்டு தெற்கு மூங்கிலாறு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்டுவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார்மேலும்தெரிவித்துள்ளனர். (05)

# இயேசுவின் பாடுகளை நினைவுகூரும் சிலுவைப் பாதை சொறிகல்முனையில்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பெரும் திருத்தலமான சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தில் இயேசுவின்பாடுகளைநினைவுகூரும் திருச்சிலுவைப் பாதை பெரிய வெள்ளிக்கிழமை நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

திருத்தலத்தின்பங்குத்தந்தை சுலக்சன் அடிகளாரின்தலைமையில்இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் உள்ளிட்ட நாட்டின் நாலாபுறமிருந்தும் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டுதமதுநேர்த்திக்கடனை நிறைவேற்றினார்கள்.

இதற்கமைவாகவெள்ளிக்கிழமை



இரவு 7.00மணிக்கு இயேசுவின் பாடுகளை திருப்பாடுகளின் காட்சிகள்

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கிறிஸ்தவபக்தர்கள்இயேசுசிலுவையில்



அறையப்பட்டதை நினைவுகூரும் வகையில்சிலுவைகளை சுமந்தவாறு 6ஆம் கொளனி அந்தோனியார் ஆலயம் மற்றும் வீரமுனை சந்தி ஆகியவற்றிலிருந்து நடைபவனி மேற்கொண்டு சம்மாந்துறை சொறிக்கல்முனைபிரதானவீதிவழியாக திருத்தலத்தை வந்தடைந்தனர்.

சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தல வளாகத்தில் (பாஸ்கா) இடம்பெற்றது.

இயேசு நாதர் அறையப்பட்டு மரணித்த திருசிலுவையின் ஒரு பகுதி இந்தியாவிலுள்ள கோவை நகரிலிருந்து எடுத்துவரப்பட்டு சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தில்பாதுகாக்கப்பட்டுவருவது இவ் ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.(05)

# யாழ். மாவட்ட கட்டளை தளபதியை சந்தித்தார் இந்தியத் துணைத் தூதர்





யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீசாய் முரளி எஸ் யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் எம்.சி.பி விக்ரமசிங்கவை யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் சந்தித்தார்.

அதன் போது இடம்பெற்ற கலந்துரையாடலில், யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத் தளபதி, இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை நினைவு கூர்ந்தார், இரு நாடுகளுக்கும் இடையில் மிக உயர்ந்த அளவிலான ஒத்துழைப்பைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

அதனை தொடர்ந்து, யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவருக்கு யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத் தளபதி சிறப்பு நினைவுச் சின்னத்தை வழங்கியதுடன், யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவரின் விஜயத்தின் அடையாளமாக விருந்தினர் பதிவேட்டு புத்தகத்தில் பாராட்டு குறிப்புக்களை எழுதினார்.

யாழ். பாதுகாப்புபடைத்தலைமையகபிரிகேடியர், பொதுப் பணி பிரிகேடியர் கே.ஜே.என்.எம்.பீ.கே. நவரத்ன, யாழ். பாதுகாப்புபடைதலைமையகபொதுப் பணிநிலை அதிகாரி உளவியல் செயற்பாடு மற்றும் யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பாலத்தைப் புனரமைக்க கிளிநொச்சியில் அடிக்கல்



கிராமிய வீதிகள் அபிவிருத்திஇராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி பாரதிபுர செபஸ்ரியார் வீதியின் பாலம் புனரமைத்தலுக்கானஅடிக்கல்நாட்டுவிழாவியாழக்கிழமை இடம்பெற்றிருந்தது.

மேற்படி நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

சிவநேசதுரைசந்திரகாந்தன்மற்றும்யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் மற்றும் ஒப்பந்ததாரர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம மக்கள் மற்றும் வீதி அதிகார சபை உத்தியோகத்தர்கள்எனபலரும்கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்கஅமைச்சர்சிவநேசதுரைசந்திரகாந்தனால் பாலம் புனரமைப்புக்கான திரைநீக்கம் செய்யப்பட்டு பின் பால புனரைப்புக்கான அடிக்கல்லும் நாட்டி வைத்தார். மேற்படி பாலமானது 15,329, 888.18 நிதி பங்களிப்பில் 90நாள்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் பகுதியில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணையின் பிரதான வீதியைப் புனரமைப்பதாகவும் அதற்குரிய நிதியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

பல சிறிய பாலங்கள் உடனடியாக புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கையை உடன் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்ததுடன் இப்பகுதிகளில் உள்ள பலகிராமிய வீதிகளைப் புனரமைப்பு செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுடன் கலந்துரையாடயிருப்பதாகவும் தெரிவித்தார். (05-113)

# கத்தரிக்கோலினால் தாக்கப்பட்டு கிராண்ட்பாஸில் ஒருவர் கொலை

கத்தரிக்கோலால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கிராண்ட்பாஸ் பிரதேசத்தை சேர்ந்த 36 வயதுடைய நபராவார்.

உயிரிழந்தவருக்கும் சந்தேக நபரொருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் எல்லை மீறியதில் சந்தேக நபர், இவரை கத்தரிக்கோலால்தாக்கியுள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் உயிரிழந்தவரது சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# புடவைக்கட்டில் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

(எச்.எம்.ஹலால்தீன்)

குச்சவெளி, புடைவைக் கட்டைச் சேர்ந்த 9 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளது. இச்சம்பத்துடன் தொடர்புடையவர் அந்த ஊரில் தற்காலிகமாக வசித்து வரும் கொழும்பைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமியின்தாயார்வெளிநாடு சென்றுள்ளார். தந்தையின் பராமரிப்பின் கீழ் இருந்து வந்த இச்சிறுமியே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மனைவி வெளிநாடு சென்றதை எடுத்து தொடர்ந்து போதைப் பொருள் பழக்கத்தில் ஈடுபட்டுவந்ததந்தை இவற்றை பொருட்படுத்தாது இருந்துள்ளார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவரைபொலிஸார் கைதுசெய்துள் ளனர். மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மியன்மாரில் இருந்து தப்பி வந்து வாழும் முஸ்லிம்களுக்கு நிவாரண உதவிகள்

யுத்தம் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து இலங்கைக்கு கடல் மார்க்கமாக வருகை தந்து பாணந்துறையில் தங்கியுள்ள மியன்மார் முஸ்லிம் மக்களுக்கு அவசரமாக காணப்பட்டு வீட்டிற்கான நிவாரணத்தை மன்னார் மெசிடோ நிறுவனம் வியாழக்கிழமை மாலை நேரடியாக சென்று வழங்கி வைத்துள்ளனர்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் இயக்குனர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் நேரடியாக விஜயம் செய்து வழங்கி வைத்துள்ளனர்.

யுத்தம் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து பங்களாதேஷில் வாழ்ந்த நிலையில் அங்கிருந்து வெளியேறி தமது உயிரை பாதுகாத்துக்கொள்ள கடலில் பயணித்த போது





கடல் மார்க்கமாக பயணித்த மியன்மார் முஸ்லிம் அகதிகள் 105 பேர் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கையில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

யாழ்ப்பாணம்வலி.வடக்குபகுதியைவந்தடைந்த மியன்மார் அகதிகள் 105 பேரையும் மீட்ட கடற்படையினர் யாழ் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.பின் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய குறித்த மியன்மார் அகதிகள் கொழும்பு பாணந்துறையில் தங்க வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு சர்வதேச அமைப்பால் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் 2023 டிசெம்பர் வரையான ஒரு வருட காலம் அவர்களுக்கான அடிப்படை உதவிகளையும் முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் அவர்களின் உதவிகள் நிறுத்தப்பட்ட நிலையில் இவ்வருடம் 2024 முதல் அவர்கள் பாணந்துறை பகுதியில் வாடகைக்கு அமர்ந்திருந்த வீடுகளுக்கான மாத வாடகையை செலுத்த முடியாத நிலையில் காணப்பட்டனர்.

குறித்த மக்கள் இருந்த வீடுகளின் ஒப்பந்தம் முடிவடைந்த மையால் குறித்த வீடுகளின் இருந்து வெளியேற வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் எவ்வித அடிப்படை உதவிகளும் இன்றி மியன்மார் அகதிகள் 105 பேரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

2022 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வருகை தந்த போது அவர்களுக்கான உடனடி மனிதாபிமான பணிகளை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) உடனடியாக சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியில் அவசர உதவிகளை வழங்கி இருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக அந்த மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக பாணந்துறை பகுதியில் அவர்கள் தங்கியுள்ள வீடுகளின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி அவர்கள் தொடர்ச்சியாக அந்த வீட்டில் தங்கி இருக்கும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை பாணந்துறை பகுதிக்குச் சென்ற மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் குறித்த வீடுகளுக்கான வாடகை பணத்தை கையளித்தனர்.

வீட்டு உரிமையாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட அகதிகளையும் சந்தித்து அவர்களுக்கான வீட்டு நிவாரண பணியாக எதிர்வரும் ஒரு வருடத்திற்கான வீட்டு வாடகைக்கான நிதியை செலுத்தியுள்ளனர்.

17 குடும்பங்களில்தயார்நிலையில் இருந்த 15 குடும்பங்களுக்கு 33 லட்சத்து 15500 ரூபா நிதியும் இரண்டு குடும்பங்கள்தமதுஆவணங்களைசரி செய்யாதநிலையில்அவர்கள்குறித்தஆவணங்களை உடன் சமர்ப்பிக்கும் போது அவர்களுக்கு 4 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 37 லட்சத்து 71 ஆயிரத்து 500 ரூபா நிதி மெசிடோ நிறுவனத்தால் அவர்களின் வீட்டு வாடகைக்காக பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட மியன்மார் முஸ்லிம்மக்களுக்குமன்னார்மெசிடோநிறுவனத்தின் மனித நேய பணி உதவியாக குறித்த உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் போதிய உதவிகள் மியன்மார் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படாத நிலையில் அந்த மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சிங்கர் பினான்ஸ்கிளை கல்முனையில் திறப்பு




(பாறுக் ஷிஹான்)

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களில்ஒன்றானசிங்கர்தனது புதிய கிளையை கல்முனை நகரில் வியாழக்கிழமை திறந்துள்ளது. இது நிறுவனத்தின் கிளை விஸ்தரிப்பின் மற்றொரு கட்டத்திற்குச் சென்றுள்ளது. மேற்படி திறப்பு விழாவில் பல்துறை சார்ந்த அதிதிகள் வருகை தந்து நிறுவனத்தின் புதிய கிளையை திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. புதிதாக திறந்து வைக்கப்பட்ட சிங்கர் பினான்ஸ் இன் கிளை இல. 110,112, பிரதான வீதி கல்முனை பகுதியில் அமைந்துள்ளது.

சிங்கர் பினான்ஸ் ஆனது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு கிளைகள் நாடு பூராகவும் இயங்கிவருவதுடன்நேற்றுகல்முனையில் 52 ஆவது கிளையை ஆரம்பித்துள்ளது. அதில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை,மட்டக்களப்புகிளைகளுடன் கல்முனைகிளை52ஆவதுகிளையாக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் லீசிங், கடன்கள், நிலையான வைப்புக்கள், வணிகக் கடன்கள், வீட்டுக் கடன்கள், சேமிப்புக் கணக்குகள், தங்க கடன்கள், சிறுவர்சேமிப்பு போன்றபலநிதிவசதிகள் இதன் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும். எனவே வாடிக்கையாளர்கள் தங்கள் நிதித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மிகவும் எளிதாக இந்த இடத்திற்குச் செல்ல முடியும்.

இது தவிர இந்தக்கிளை திறந்து வைக்கப்பட்ட பின்னர் தேசிய கீதம் இயற்றலுடன் தொடர்ச்சியாக அதிதிகளின் மங்கள விளக்கேற்றல் நடைபெற்றது. சிங்கர் பினான்ஸைப் பொறுத்த வரையில் எங்கள் நோக்கம், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்த அளவிலான நிதிச்சேவையை வழங்குவதாகும். இந்தபுதியகிளையின் மூலம், வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்தநிதிசேவைஅனுபவத்தையும், மிகஇலகுவாகஅணுகக்கூடியவசதிகள் தற்போது செய்து கொடுக்கப்பட்டுள்ளன என நாங்கள் நம்புகிறோம். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த நிதிச் சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் உறவுகளுடன்சேவைசெய்யநாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இந்த புதிய கிளையை வாடிக்கையாளர்களுக்கு உகந்த சேவை மத்திய நிலையமாக மேம்படுத்துவதில் எங்களின் பணிவான மகிழ்ச்சி. உங்கள் வாழ்வின் இலட்சியத்துக்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றத் தயாராக இருக்கின்றோம்' என பிரதம நிறைவேற்று அதிகாரி கூறினார்.

பின்னர்அதிதிகளானநிறுவனத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் துஷான்அமரசூரிய, பிரதமசெயற்பாட்டு உத்தியோகத்தர் இமான் பெரேரா , கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர், உட்பட இந்நிகழ்வில் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்து உறுப்பினர்கள், உட்பட விசேட அதிதிகள் வாடிக்கையாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நன்னடத்தை பாடசாலை மேற்பார்வையாளர் பெண்ணுக்கு மீண்டும் 14 நாள்கள் மறியல்

(பாறுக் ஷிஹான்)

நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் புதன்கிழமை மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

# தடுப்பூசி போடப்பட்ட மாணவர்கள் 10 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

## களுத்துறையில் சம்பவம்

களுத்துறை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் மாணவர்கள் குழுவொன்றுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக 10 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என நாகொட வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் 12 வயது மற்றும் 13 வயதையுடைய மாணவர்கள் குழுவே சேர்க்கப்பட்டுள்ளதாக மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் வைத்தியசாலை சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு மயக்கம் மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் இருப்பதாலேயே குறித்த 10 பேரும் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலையிலிருந்து தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(05)

# கிராமிய வீதிகள் மற்றும் பாலங்கள் புனரமைப்பு தொடர்பான சந்திப்பு

## கிளி. முல்லை மாவட்டங்களில்





கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கிராமிய வீதிகள் பாலங்கள் புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில், கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு



மாவட்டங்களின் கிராமிய வீதி மற்றும் பாலங்களின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதில் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எட்டப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் முல்லை மன்னார் மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் , கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் இணைப்பாளர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், அமைச்சின் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர்கள், அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் கிராமிய மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05-113)

# சர்வதேச மகளிர் தினம் நிந்தவூரில் இப்தாருடன்



(நூருல் ஹுதா உமர்)

'அவளுடைய பலம் - நாட்டுக்கு முன்னேற்றம்' எனும் தொனிப் பொருளுடனான 114 ஆவது சர்வதேச மகளிர் தினம் நிந்தவூர் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த



2024.03.28 ஆம் திகதி 150 மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கான இப்தார் நிகழ்வுடன் இடம்பெற்றது.




இந்நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம் அப்துல் லத்தீப்பின் தலைமையிலும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர் றிஸ்வானுல் ஜன்னாவின் நெறிப்படுத்தலிலும் மகளிர் மகாசங்கம் மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 50 குறைந்த வருமானம் உடைய பெண்களுக்கு நிந்தவூரைச் சேர்ந்த தனவந்தர் ஒருவரினாலும் ரமழான் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ எம் சரீம், கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் பைறோஸ், திட்டமிடல் பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் பைசால், கணக்குப் பிரிவின் நிதி உதவியாளர் ஏ. நஜீப், மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் ஐ. கிஷோர் ஜஹான், சமூக சேவை உத்தியோகத்தர் முர்சித், உளவளத் துணை உதவியாளர்கள் ஹப்ரத் மற்றும் தஹ்லான், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் இம்றியாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஹஸீனா, உட்பட சமூக சேவை பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (05)

# 500 ரூபாய் இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்டுக்கு சிறை

500 ரூபா இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு நான்கு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பிரகாரம், பொலிஸ் அதிகாரிக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிமீறல் தொடர்பான சட்ட நடவடிக்கையை தாக்கல் செய்வதைத் தவிர்ப்பதற்காக ஓட்டோ சாரதியிடம் பொலிஸ் சார்ஜன்ட் 500 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து பிரதி பொலிஸ் மா அதிபரின் அறிவிப்பின் அடிப்படையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு அதன் பிறகு நான்கு குற்றச்சாட்டுகளுடன் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

நான்கு குற்றச்சாட்டுக்களிலும் பொலிஸ் சார்ஜன்ட் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதை அடுத்து, அவருக்கு நான்கு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், 20,000 ரூபா அபராதமும், இலஞ்சமாக பெற்ற 500 ரூபாவை திருப்பிக்கொடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (05)

# யாழ். - நெல்லியடியில் கசிப்புக்குகை முற்றுகை

## பொலிஸார் அதிரடி

யாழ்ப்பாணம் - நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்பு குகையொன்று புதன்கிழமை முற்றுகையிடப்பட்டது.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் குறித்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

600 லீற்றருக்கும் மேற்பட்ட கோடாவும் கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்களும் இதன்போது பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

(05)

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட் JRIDE

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

GET IT ON Google Play
Download on the App Store

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

## JRIDE TAXI APP
## SPEED IT NET

பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2024இல் வெளியிடப்பெற்றது